வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.324/16
வழக்கு சாட்சி – அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனலட்சுமி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | தொழில் | மருத்துவமனையில் பணிபுரிகிறேன் |
| கிராமம் | உத்தமபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | உத்தமபாளையம் | வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.24

**( 1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 மணிகண்டன் எனது தம்பி. எதிரிகளை தெரியும். எதிரிகள் மாரநாதா சபை சர்ச்சில் போதகர்களாக இருந்தார்கள். எதிரிகள் விக்டர், அனிதாவும் கடந்த 26.3.2012 ம் வருடம் எனக்கு இபியில் கணக்கீட்டாளராக வேலை வாங்கி தருவதாகவும், அவர்களுக்கு தெரிந்த கென்றிபிலிப்ஸ் என்ற நபர் சென்னையில் இருப்பதாகவும் அவருக்கு நிறையபேர் தெரியும் என்றும், அவருக்கு அமைச்சர் மற்றும் முதலமைச்சரை தெரியும் என்றும் சொல்லி ரூ.3,50,000/– பணம் எதிரிகள் கேட்டார்கள் அதன்படி அன்றையதேதியில் எதிரிகளின் வீட்டில் வைத்து நாங்கள் கொடுத்தோம். அதன்பின்னர் 10.11.13 தேதியில் இபியில் இருந்து உதவி பொறியாளருக்கான பணிக்கு 21.11.13 அன்று நேர்முகதேர்வு நடப்பதாக கடிதம் என தம்பிக்கு வந்திருந்தது. எதிரிகளிடம் ரூ11,00000/–த்தை கொடுத்தால் மேற்படி வேலை வாங்கிகொடுப்பதாக ஆசைவார்த்தை கூறினார்கள். நாங்கள் மேற்படி வேலைக்கு எங்கள் வீட்டை விற்று எங்களிடமிருந்த நகையை அடகு வைத்து பாக்கி பணத்தை வட்டிக்கு வாங்கி கொடுத்தோம். அதன்பின்னர் என் தம்பிக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. நாங்கள் எதிரிகளிடம் பணம் பற்றி கேட்டோம். அதற்கு 27.5.14 அன்று எதிரிகள் எனது பெயருக்கு ரூ8,00,000/–த்திற்கு காசேலை கொடுத்தார்கள். காசோலையை வங்கியில் சென்று கொடுத்த போது பணம்இல்லை என்று

கூறிவிட்டார்கள். மீண்டும் எதிரிகளிடம் கேட்டோம். அதன்பின்னர் 10.5.14 அன்று மீண்டும் எதிரிகள் ரூ6,50,000/-த்திற்கு காசோலை கொடுத்தார்கள். காசோலையை வங்கியில் சென்று கொடுத்த போது பணம் இல்லை என்று கூறிவிட்டார்கள். எதிரிகள் 16.5.14 அன்று ரூ4,00,000/-ம் கொடுத்தார்கள். பாக்கி பணத்தை கேட்ட போது 8.6.14 அன்று ரூ50,000/-த்தை கொடுத்தார்கள். 13.6.14 அன்று ரூ50,000/-த்தை கொடுத்தார்கள். அதன்பின்னர் பாக்கி பணத்தை நான், என் தம்பி, என் அம்மா, என் கணவர் ஆகியோர் போய் பணம் கேட்டு எதிரிகளின் வீட்டிற்கு சென்றபோது பணம் கேட்டு வீட்டிற்கு வந்தால் ஆட்களை வைத்து அடித்து கொன்றுவிடுவதாக எதிரிகள் மிரட்டினார்கள். அதன்பின்னர் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். புகாரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். புகார் ஏற்கனவே அசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை** செய்யபடவில்லை.